செ.வெ.எண்:683 நாள்:13.08.2010

# செய்தி வெளியீடு

## தஞ்சைப் பெரியகோயில் 1000 ஆண்டு நிறைவு விழா!
## தஞ்சை நகர மேம்பாட்டுப் பணிகளுக்கு
## 25 கோடியே 19 இலட்சம் ரூபாய் நிதிஒதுக்கீடு!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

மாமன்னர் இராஜராஜனின் தஞ்சைப் பெரியகோயில் 1000 ஆண்டு நிறைவடைவதைக் கொண்டாடிடும் வகையில், தமிழக அரசின் சார்பில், தஞ்சையில் செப்டம்பர் திங்கள் 25 மற்றும் 26 ஆகிய இரு நாட்களுக்கு விழா நடத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்திருப்பதையொட்டி; தஞ்சை நகரில் சாலைகள் மேம்பாடு, பழைய மற்றும் புதிய பேருந்து நிலையங்கள் மேம்பாடு, பெரியகோயில் முதல் மருத்துவக் கல்லூரி வரை தெருவிளக்குகள், நவீன சுகாதார வளாகங்கள், இராஜராஜசோழன் சிலை நிறுவப்பட்டுள்ள பூங்காவை அழகுபடுத்துதல், பெயர்ப் பலகைகள் மற்றும் தகவல் பலகைகள் அமைத்தல், சாமந்தான்குளத்தினை மேம்படுத்துதல், பெரியகோயில் அருகிலுள்ள ஜி.ஏ.கால்வாயின் பாலத்தை அகலப்படுத்தல் ஆகிய அடிப்படைப் பணிகளை நிறைவேற்றுவதற்காக 25 கோடியே 19 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, நிர்வாக அனுமதி வழங்கி முதலமைச்சர் கலைஞர் இன்று (13.8.2010) உத்தரவிட்டுள்ளார்.

*****

வெளியீடு:

இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.